# NEWBEC

NEW WAY OF BEING CHURCH | தவக்காலம் முதலாம் ஞாயிறு | 9 மார்ச் 2025

**எதிர்நோக்கிய திருப்பயணிகளாகக் கொண்டாடுதல், செவிமடுத்தல், மற்றும் பயணித்தல்**

மாதாந்திர நோக்கம் மற்றும் கருப்பொருள்:
குடும்பம் (உடன் பயணம்) குடும்ப மதிப்பீடுகளையும் உறவையும் பேண அழைப்பு



## "...எதிர்நோக்குடன் வாழச்செய்யும் கிறிஸ்து" 1 தீமோத்தேயு 1:1

இந்த ஜூபிலி 2025 ஆம் ஆண்டில் இயேசுவால் மட்டுமே உருவாக்கக்கூடிய நல்லிணக்கத்தின் அனுபவத்தை நமக்குத் தூய ஆவியார் பரிசாக அளித்துள்ளார். கிழிந்து, பிளவுபட்ட இந்த உலகில் நமக்கு அது சாட்சியாகவும் பரிசாகவும் உள்ளது. கிறிஸ்துவ எதிர்நோக்கு இருள் மற்றும் விரக்தியின் மத்தியில் நமது நம்பிக்கையைப் புதுப்பித்துக் கொள்வதற்கான ஒரு நேரமாகும். இது இறைவனுடனான, உண்மையான தனிப்பட்ட சந்திப்பு. "கதவு" (யோவான் 10:7) நமது மீட்பின் கதவு. திருஅவை எப்போதும் எல்லா இடங்களிலும் அனைவருக்கும் "நமது எதிர்நோக்கு" என்று அறிவிக்க ஒப்படைக்கப்பட்டுள்ளது. (1 தீமோத்தேயு 1;1)

நம்முடைய தவக்காலப் பயணத்தைத் தொடங்கும்போது, தமதிரித்துவத்தோடும், திருஅவையின் மக்களாக, ஆயர்மாமன்ற பேரவையில் மாமன்றத்தின் தூதுரையை நோக்கிப் பயணிக்க நம்மைத் தயாரித்துக்கொள்ளலாம்.

ஆயர்மாமன்ற செயல்முறை கடவுளின் தூய மக்களாக நமது வார்த்தை-வழிபாடு - சாட்சியத்தை இணைக்கிறது என்பதை நம் எண்ணத்திலும் உள்ளத்திலும் தாங்கிக்கொள்வோம். **புனித நூல்களுக்கு திரும்புவது, ஆழ்நிலை இறைவேண்டல், தொடர் மனமாற்றத்தோடு கூடிய உரையாடலின் வழி அடைக்கலத்தை கண்டடைவது, ஊக்குவிக்கப்படுவது மற்றும் எதிர்நோக்கு** இவைகள் நம் வாழ்க்கையின் பிரச்னைகளுக்கு மத்தியில் நமது நிலைத்தன்மை மற்றும் அர்ப்பணிப்பை நங்கூரமிடும் பாதையாகும். அவை நம்மை ஊக்குவிக்கின்றன. தந்தையின் அரசான கடவுளின் அரசு என்ற நமது இலக்கு ஒருபோதும் மறந்துபோவதில்லை. கடவுளின் பிள்ளைகளாக நமது புதுப்பித்தல், நமது நம்பிக்கையை அறிக்கையிடுதல், எதிர்நோக்கில் நமது ஒன்றிப்பை அனுபவித்தல், மற்றும் மகிழ்ச்சியுடனும், அன்புடனும் நமது பணியை வாழ்வது என்ற கடவுளின் அழைப்பின் அடிப்படையில் அமைந்துள்ளது.

இந்த ஜூபிலி ஆண்டு,நம்முடைய குடும்பங்கள், அடிப்படை திருச்சபை சமூகங்கள், திருஅவை, சமூகம் கடவுளின் படைப்பின் மீதான அக்கறை ஆகியவற்றில் கடவுள் மீதான எதிர்நோக்கால் குறிக்கப்படுகிறது. கடவுளுடன் பயணிகளாக நாம் ஒன்றித்துப் பயணம் செய்வது, கடவுளின் மக்களில் சகோதர சகோதரிகளாக குறிப்பாக, மறக்கப்பட்ட, மற்றும் கைவிடப்பட்டவர்களாக, இருப்போரை இரக்கமுள்ள இயேசு மற்றும் தூய ஆவியாருடன் உயிர்ப்புடன் சந்திக்கும் ஒரு புதிய சந்திப்பாகும்.

ஆயர்மாமன்றத்தில் குரலற்றவர்களை இதயப்பூர்வமாக செவிமடுப்பது என்ற இந்த ஆயர்மாமன்றவிழா தான், புலபெயர்ந்தோர், ஏழைகள், அல்லது காயமுற்றோர், மனதால் காயமடைந்தோர், நோயாளிகள், முதியோர், வீடற்றவர்கள், கைதிகள் மற்றும் பெருநகரங்களில் தனிமையில் இருக்கும் இளைஞர்கள் என நமது நட்பு தொடங்குகிறது. திருமுழுமுக்கு பெற்ற கடவுளின் மக்களைப் பராமரிப்பது நமது முன்னுரிமை. ஆனாலும் ஜூபிலி கதவைத் திறப்பது என்பது, நம்முடைய உள்ளங்களை தனிப்பட்ட வகையில் "பாவிகள்" மற்றும் நாடற்றவர்கள்" அனைவருக்கும் நம் இதயங்களைத் திறக்க வழிவகுக்கும். ஏனெனில் அவர்களும் வீதிகளில் நற்செய்தியின் மெல்லிய அறிவிப்பை அனுபவிக்க ஏங்குகிறார்கள்.

2025 ஜூபிலி ஆண்டில் தவக்காலப் பயணத்தின் திறவுகோல் என்ன?

> அன்பின் ஒளிக்கீற்றையும் கிறிஸ்துவின் உடனிருப்பையும் உலகிற்குக் காட்டவும் ஒவ்வொரு குடும்பமும் அழைக்கப்படுகிறது
>
> திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட்

**இன்றைய இறைவார்த்தை:**

இணைச்சட்டம்: 26: 4-10

திருப்பாடல்: 91: 1-2, 10-15

உரோமையர்: 10: 8-13

லூக்கா 4: 1-13

INTERNAL CIRCULATION ONLY
BUL 10/2025

**Contributed by:** Archdiocesan Office for Human Development (AOHD)
**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org